# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1743/28 - 2012 පෙබරවාරි 03 වැනි සිකුරාදා - 2012.02.03

*1743/28 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2010 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிய (திருத்தச்) சட்டம்**

*10 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

மேற்குறித்த திருத்தச் சட்டத்தின் விதிமுறைகளின் படி, 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னரான குறித்த சம்பவங்கள் தொடர்பில் உரிமை கோரப்படும் திகதி 31.12.2012 என இத்தால் கட்டளையிடுகின்றேன்.

இந்தக் கட்டளைகள் 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க விதவைகள் மற்றும் அநாதைகள் (ஆயுதப்படை) சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பிலும் ஏற்புடையனவாகும்.

டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, சனவரி 31.

2 - 598/1

---

**2010 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய (திருத்தச்) சட்டம்**

*9 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

மேற்குறித்த திருத்தச் சட்டத்தின் விதிமுறைகளின் படி, 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னரான குறித்த சம்பவங்கள் தொடர்பில் உரிமை கோரப்படும் திகதி 31.12.2012 என இத்தால் கட்டளையிடுகின்றேன்.

இந்தக் கட்டளைகள் 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க தபுதாரர் மற்றும் அநாதைகள் (ஆயுதப்படை) சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பிலும் ஏற்புடையனவாகும்.

டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, சனவரி 31.

2 - 598/2

**1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்ட (ஆயுதப் படைகள்) சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய திட்ட (ஆயுதப் படைகள்) சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்ட (ஆயுதப் படைகள்) திருத்தச் சட்டத்தினாலும் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டீ. ஜே. செனவிரத்ன ஆகிய நான், ஆயுதப் படைகளின் தொண்டர் உறுப்பினர் ஒருவர் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பாளராதல் சம்பந்தமாக கீழ் குறிப்பிட்டுள்ள கட்டளைகளை விதிக்கிறேன்.

2009, யூன் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை 1607/8 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமான பத்திரிகையினால் வெளியிடப்பட்ட 3 ஆம் பிரிவின் கீழான கட்டளையின் இல. 03 ஐ கீழ் குறிப்பிட்டுள்ளபடி திருத்தம் செய்கின்றேன்.

1. 01. 09.1981 ஆந் திகதிக்கு முன் நியமனம் பெற்று அத்திகதியில் சேவையிலிருந்த ஒரு உறுப்பினராக இருப்பின் அவருக்கும் அவரது துணைவருக்கும் அநாதைகள் அல்லது அநாதைகளின் பாதுகாவலர்களுக்கும் விருப்புரிமையை தெரிவிக்க முடியுமான இறுதித் திகதி 31.12.2012 ஆகும்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கட்டளைகள் முன் போலவே நடைமுறைப்படுத்தப்படும்.

டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, சனவரி 31.

2 - 598/3

---

**1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டம்**

3 (6) (அ) மற்றும் (ஆ) பிரிவின் கீழான கட்டளை

2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் (திருத்தங்கள்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சட்டத்தின் 3 (6) (அ) மற்றும் (ஆ) பிரிவுகளினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இறுதியாக இன்னும் ஒரு முறை மட்டும் விருப்பினை தெரிவிப்பதற்கான காலத்தினை நீடிப்பதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டீ. ஜே. செனவிரத்ன ஆகிய நான் இக்கட்டளையினால் :-

* 1983.08.01 ஆந் திகதியில் அரச சேவையில் இருந்த பெண் அலுவலரொருவரினால் ஓய்வூதிய திட்டத்திற்கு விருப்பினை தெரிவிக்க தீர்மானம் எடுக்க வேண்டிய திகதி எத்திகதிக்கு முன்னரோ அத்திகதி 31.12.2012 ஆகவும் ;

* பெண் அலுவலர் ஓய்வு பெற்றிருப்பின் அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பங்களிப்பும் பணம் மற்றும் வட்டி ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டுமெனவும் அது ஓய்வூதிய சுற்றறிக்கை இல. 3/2008 இற்கு அமைவாக இருக்க வேண்டுமெனவும் ;

* மேலும் பெண் அலுவலர் இறந்திருப்பின் குறித்த பங்களிப்புப் பணம் மற்றும் வட்டி கொடையிலிருந்து ஒரே தடவையில் கழிக்கப்பட வேண்டுமெனவும், பெண் அலுவலர் சேவையில் இருப்பின் அவர் ஓய்வுபெற முன் மொத்த பங்களிப்பும் பணம் மற்றும் வட்டி அறவிடப்பட வேண்டுமெனவும் கட்டளையிடுகின்றேன். மேலும், இக்கட்டளை இலங்கை பிரஜாவுரிமை உடைய பெண்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதெனவும் கட்டளையிடுகின்றேன்.

டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
2012, சனவரி 31.

2 - 598/4

## ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு

*1934, பெப்புருவரி 5 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மற்றும் 1972, மே 05 ஆந் திகதி கொண்ட திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 51 ஆந் வாசகத்தின் கீழான கட்டளை.*

### அறிவித்தல்

அவ்வப்போது திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் வாசகத்திற்கு மேலதிகமாகக் கீழ்க்காட்டப்படும் இடை வாசகங்ளை உட்புகுத்துவதன் மூலம் தொடர்ந்தும் திருத்தியமைக்கப்படுகின்றது.

1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவேனா கல்விச் சட்டம் என்பனவற்றின் கீழ் ஓய்வூதிய உரித்தினைப் பெறும் ஆசிரிய/ஆசிரியைகளுக்கு ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரித்துக் கிடைக்கையில் குறித்த ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் ஏற்புடையதாகும் விதிமுறைகள் அவ்வண்ணமே அவர்களுக்கும் ஏற்புடையனவாகும். எவ்வாறாயினும், அவர்கள் தமது ஓய்வூதிய உரித்தினைத் தற்காத்துக் கொள்வதற்காகத் தமது சேவைக்காலத்தினுள் ஆசிரிய ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுத் தொகை செலுத்த வேண்டியதுடன், அவ்வுதவு தொகை கிடைக்கும் அடிப்படை வேதனத்தின் 6% ஆதல் வேண்டும்.

டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
2012, சனவரி 31.

2 - 598/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.